# சிவகங்கையில் ஆஞ்சநேயர் ஜெயந்தி விழா



சிவகங்கை, டிச.21-

சிவகங்கை ஊராட்சி ஒன்றியம் மதுரை வீரன் கோவில் வளாகம், வந்தவாசி ரோடு, (சித்ராடீ கடை எதிர்ரோட்டில் உள்ளே) ஸ்ரீ மகாலெட்சுமி சொரூப ஆனந்த பஞ்சமுக ஆஞ்சநேயருக்கு (19/12/2025) 8ம் ஆண்டு ஆஞ்சநேயர் ஜெயந்தி விழா நேற்று நடைபெற்றது. பஞ்சமுக ஆஞ்சநேயருக்கு காலை 9.30 மணி முதல் 10.30 மணிக்கு சிறப்பு அபிசேகங்கள், ஆராதனை சிறப்பாக நடைபெற்றது. அருள்மிகு மகாலெட்சுமி சொரூப ஆனந்த பஞ்சமுக ஆஞ்சநேயர் கோவிலில் அனுமன் ஜெயந்தி விழா கொண்டாடப்பட்டு வருகிறது பஞ்சமுக விஜய ஆஞ்சநேயர் பக்தர்களுக்கு காட்சி அளித்தார். பகல் 1:00 மணிக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.திருக்கோவிலின் சிறப்பம்சங்கள்:

நோய்களை தீர்க்கும் தன்வந்திரி பகவான் அமைந்துள்ளார். குழந்தைகள் நன்கு கல்வி பயில்வதற்கு கம்பர் தீர்த்தம், நோய்தீர்க்கும் மூலிகை விபூதி கண்ணேரு, கண் திருஷ்டி பிரச்சனை

தீர செந்தாமரைக் கண்மலர் கொடுக்கப்படுகிறது.

மனதிற்கு அமைதி கொடுக்கும் ஸ்தலம்.

ஒவ்வொரு சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு அருள்மிகு மகாலெட்சுமி சொரூப ஸ்ரீ ஆனந்த ஆஞ்சநேயருக்கு அபிஷேக ஆராதனைகள் நடைபெறுகிறது. மேலும் கோயில் விவரங்களை பற்றிய அறிய

திருக்கோவில் உருவாக்கிய ஸ்தாபகர் சிவக்குமார் சுவாமிகள் மற்றும் சாமியாடி மலைச்சாமி, மதுரை வீரன் மணிக்குமார் செல் : 9750010496.






# என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பாக எண் 322ல் கூட்டம் நடைபெற்றது

சிவகங்கை, டிச.21-

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி வடக்கு ஒன்றிய திமுக சார்பில் பாகமுகவர் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் கி.சத்தியே ந்திரன் தலைமையில் பாலகிருஷ்ணன் நாகராஜன் முன்னிலையில் மானாமதுரை சட்டமன்ற உறுப் பினரும் முன்னாள் அமைச்சர் தமிழரசி ரவிக்குமார் சிறப்புரையாற்றினார். ஒன்றிய செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சுப.மதியரசன் மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் காளிமுத்து கண்ணமங்கலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க முன்னாள் தலைவர் சுப தமிழரசன் ஒன்றிய துணை செயலாளர் சிவனேசன் மாவட்ட பிரதிநிதிகள் உதயசூரியன், சாருஹாசன் மானாமதுரை தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் கி.கண்ணன் ,ஒன்றிய விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் பாலாஜி ஒன்றிய விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் அஜித் குமார் இளைஞர் அணி வாணி மணி , நிர்வாகிகள் உள்ளிட்ட நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.





■ சிவகங்கை மாவட்டம், இலுப்பைக்குடியில் உள்ள பயிற்சி முடித்து இந்தோ தீபெத் 44 வாரம் எல்லைக்காவல் படை காவலர் பயிற்சி மையத்தில் நேற்று (20.12.2025) காலை 07.50 மணி முதல் நண்பகல் 12.15 வரை பயிற்சி நிறைவு அணிவகுப்பிற்கான நிகழ்ச்சி PASSING OUT PARADE OF 495th Constable / GD Batch பயிற்சி மண்டலம் ஐ.டி.பி.பி.எஃப் ஐஜி மனு மகாராஜ் தலைமையிலும், துணைத் தலைவர் ஜஸ்டின் ராபர்ட் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.வீரர்கள் கராத்தே, சிலம்பம் உள்ளிட்ட பல்வேறு வீர சாகசங்களை நிகழ்த்தி காட்டி பார்வையாளர்களை ரசிக்க வைத்தனர். மேலும் பயிற்சி முடித்த 1244 பேருக்கு சான்றிதழ் மற்றும் கேடயங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது..



■ திருச்சிராப்பள்ளி மாவட்ட கண்காணிப்பு அலுவலர் / அரசு செயலாளர் (திட்டம் மற்றும் வளர்ச்சி) திரு.சஜ்ஜன்சிங் ஆர்.சாவன், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வே.சரவணன். இ.ஆ.ப.. அவர்கள் முன்னிலையில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட ராஜா காலனி வார்டு எண் 54 ல் உள்ள மாரிஸ் அவன்யூ, குமுளிதோப்பு, ராஜா காலனி 6வது தெரு மற்றும் புதிய ராஜா காலனி பிரதான சாலை ஆகிய பகுதிகளில் சிறப்பு நிதி திட்டத்தின் கீழ் ரூ.50.50 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள தார் சாலையை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.





## பல்லாவரத்தில் ஐ.சி.எம் ஜெப வீடு சார்பில் நடைபெற்ற இலவச பொது மருத்துவ முகாமில் 100க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பயன்பெற்றனர்

பல்லாவரம், டிச.21-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரத்தில் உள்ள ஐ சி எம் ஜெப வீடு சார்பில் கிறிஸ்மஸ் பண்டிகை முன்னிட்டு இலவச மாபெரும் மருத்துவ முகாம் நடைபெற்றது.

மருத்துவ முகாமிற்கு பாஸ்டர் ஜெயராஜ் தலைமையில் பாஸ்டர் கிரேஸ் ஜெயராஜ் ஏற்பா ட்டில் நடைபெற்றது இந்த முகாமினை அப்போஸ்தலர் டி.எஸ். ஜெயா தங்கராஜ் கலந்து கொண்டு தொடங்கி வைத்தார். இந்த மருத்துவ முகாமில் பாரத் மருத் துவமனை சார்பில் சர்க்கரை இரத்த பரிசோ தனை, பொது மருத்துவம் ஆகியவை பார்க்கப்பட்டு பொதுமக்களுக்கு இலவச மருந்து மற்றும்ப் மாத்திரை வழங்கப்பட்டன.

மேலும் கண் மருத்துவ ர்கள் சார்பில் கண் பார்வை குறைபாடு, மாலைக்கண், விழித்திரை பாதிப்பு, கிட்ட பார்வை, தூரபார்வை, ஆகிய பாதிப்புகளுக்கு இலவசமாக பரிசோதனை செய்யப்பட்டது. தொடர்ந்து கண் கண்ணாடி அணிய மருத்துவர்களால் பரிந்துரைக் கப்பட்ட நபர்களுக்கு இலவசமாக கண் கண்ணாடி வழங்கப்பட்டது. இலவச பொது மற்றும் கண் சிகிச்சை மருத்து முகாமில் ஐ.சி.எம் திருச்சபை ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் என 100க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பயன் பெற்றனர். இந்த நிகழ்ச்சியில் பாரத் கல்லூரி சார்பில் ஒருங்கிணைப்பாளர் வேதமுத்து, ஐ.சி.எம் திருச்சபை நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



■ வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, காட்பாடியில் நடைபெற்ற அதிமுக பொதுக்கூட்டத்தில், 2026 சட்டமன்ற தேர்தலில் போட்டியிட, காட்பாடி அதிமுக முன்னாள் நகர மன்ற உறுப்பினர் ரிஷிகுமார், 2026 சட்டமன்றத் தேர்தல் அதிமுக தேர்தல் பொறுப்பாளரிடம் விருப்ப மனு வழங்கினார்.



# காரில் கடத்திய குட்கா மற்றும் புகையிலை பறிமுதல் செய்த போலீசார் 2 பேர் கைது

கடலூர், டிச.21-

கடலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் S. ஜெயக்குமார் காவல் போதை பொருட்களை கடத்தி விற்பனை செய்யும் நபர்களை கண்காணித்து கைது செய்து நடவடிக்கை எடுக்குமாறு பிறப்பித்த உத்தரவின்பேரில் பண்ருட்டி துணை கண்காணிப்பாளர் P.N. ராஜா மேற்பார்வையில், காவல் ஆய்வாளர் அசோகன், உதவி ஆய்வாளர்கள் பிரேம்குமார். தவச்செல்வம் மற்றும் போலீசார் போதைப்பொருள் குற்ற தடுப்பு நடவடிக்கையாக கண்டரக்கோட்டை சோதனைச்சாவடியில் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தபோது, வந்த வெள்ளை நிறம் மாருதி கார் பதிவெண் TN 34 U 5666 வாகனத்தை நிறுத்தி சோதனை செய்ததில் சுமார் 333 கிலோ போதை குட்கா பொருட்கள் இருந்ததை கைப்பற்றியும் போதை குட்கா பொருட்கள் கடத்தி வந்த 1.கோபாலகிருஷ்ணன் வயது 39, த/பெ. முருகேசன், நம்பர் 233, தேவனாங்குறிச்சி திருச்செங்கோடு தாலுக்கா, நாமக்கல் மாவட்டம் 2. முகமது பாசில் வயது 35, த/பெ காஜா மொய்தீன், நம்பர் 196, கௌதம் நகர், சாலமேடு விழுப்புரம் மாவட்டம் ஆகியோர்களை மடக்கி பிடித்து விசாரணை மேற்கொண்டதில் பெங்களூரில் இருந்து விழுப்புரத்துக்கு கொரியர் மூலம் கடத்தி வந்து, கடலூர் மாவட்டத்தில் விற்பனை செய்ய முயன்றவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். தொடர்ந்து விசாரணை மேற்கொள் ளப்பட்டு வருகிறது.

கடலூர் மாவட்டத்தில் இதுவரை 302 குட்கா போதைப்பொருட்கள் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 390 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து 5800 கிலோ குட்கா பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளது. 10 குற்றவாளிகள் குண்டர் தடுப்பு காவலில் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் கஞ்சா கடத்தல் மற்றும் விற்பனை செய்தது சம்பந்தமாக 133 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 342 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். 230 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டு, 15 குற்றவாளிகள் குண்டர் தடுப்பு காவலில் கைது செய்யப்பட்டுள்ளனர். போதைப் பொருட்கள், கஞ்சா கடத்தல் மற்றும் விற்பனை செய்யும் நபர்கள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என கடலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# 'பூர்ணசந்திரன் இறந்ததற்கு தமிழக அரசே காரணம்' - அரசியல் கட்சியினர் குற்றச்சாட்டு



மதுரை, டிச.21-

பூர்ணசந்திரன் தீக்குளித்து இறந்ததற்கு தமிழக அரசே காரணம் என்று பல்வேறு அரசியல் கட்சியினர் குற்றம் சாட்டினர். திருப்பரங்குன்றம் மலை உச்சியில் உள்ள தீபத்தூணில் தீபமேற்றும் உயர் நீதிமன்ற உத்தரவை செயல்படுத்தக் கோரி, மதுரை நரிமேடு பகுதியைச் சேர்ந்த பூர்ணசந்திரன் நேற்று முன்தினம் தல்லாகுளம் புறக்காவல் நிலை யத்தில் தீக்குளித்து உயிரிழந்தார்.

மதுரை அரசு மருத்துவமனையில் இருந்த அவரது உடலுக்கு அதிமுக சார்பில் முன்னாள் எம்எல்ஏவும், மருத்துவர் அணி இணைச் செயலாளருமான டாக்டர் பா.சரவணன் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். அவரது குடும்பத்தினர் மற்றும் உறவினர் களுக்கு ஆறுதல் கூறினார்.

பின்னர், செய்தியாளர்களிடம் சரவணன் கூறியதாவது: திருப்பரங்குன்றம் மலையில் கார்த்திகை தீபம் ஏற்றும் நீதிமன்ற உத்தரவை நிறைவேற்ற தமிழக அரசு தவறி விட்டதாக ஏற்கெனவே எங்களது பொதுச் செயலாளர் பழனிசாமி கூறியுள்ளார்.

அரசு முறையாக செயல்பட்டிருந்தால் பூர்ண சந்திரன் உயிரிழந்திருக்க மாட்டார். அவரது இறப்புக்கு தமிழக அரசே முழு காரணம். மத நல்லிணக்கத்தை பாதிக்கும் வகையிலும் வாக்குக்காகவும் திமுக அரசு இப்படி செயல்படுகிறது. அவரது குடும்பத்துக்கு நிதி உதவி மற்றும் அவரது மனைவிக்கு அரசு வேலை வழங்க வேண்டும் என்று கூறினார்.

தென்னிந்திய பார்வர்ட் பிளாக் கட்சி தலைவர் திருமாறன் கூறுகையில், திருப்பரங்குன்றம் மலையில் தீபம் ஏற்றக்கோரி உயிர் தியாகம் செய்த பூர்ண சந்திரனுக்கு இரங்கல் தெரிவிக்க மதுரையில் பல்வேறு இடங்களில் போஸ்டர் ஒட்டியவர்களை போலீஸார் கைது செய்துள்ளனர். உயர் நீதிமன்ற உத்தரவை அரசு நிறைவேற்றி இருந்தால் இது நடத்திருக்காது.

திராவிட மாடல் அரசு இந்துக்களுக்கு எதிராகச் செயல்படுகிறது, என்றார்.

பாரதிய பார்வர்ட் பிளாக் கட்சி தலைவர் முருகன் கூறுகையில், பூர்ண சந்திரன் தற்கொலை செய்து கொண்டதற்கு தமிழக அரசே பொறுப்பேற்க வேண்டும். பாதிக்கப்பட்ட அவரது குடும்பத்துக்கு ரூ.1 கோடி நிதியுதவி, குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலை வழங்க வேண்டும் என்றார்.



# தமிழ்நாடு அறிவியல் இயக்க திருப்பத்தூர் கிளை மாநாடு

திருப்பத்தூர், டிச.21-

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் கிறிஸ்துராஜா பதின்ம மேல்நிலைப்பள்ளி கூட்டரங்கில் தமிழ்நாடு அறிவியல் இயக்க திருப்பத்தூர் கிளை மாநாடு சிறப்பாக நடைபெற்றது. மாவட்டத் தலைவர் முனைவர் கோபிநாத் தலைமை வகித்து தலைமை உரையாற்றினார். மாவட்டத் துணைத்தலைவர் அரிமா பாபா அமீர் பாதுஷா கிறிஸ்துராஜா பதின்ம மேல்நிலைப்பள்ளி நிறுவுனர் விக்டர் முன்னிலை வகித்தனர். கிளைச் செயலாளர் சேகர் வரவேற்றார். தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டச் செயலாளர் ஆரோக்கியசாமி அறிவியல் இயக்க செயல்பாடுகள் குறித்து நோக்க உரையாற்றினார். சிறப்பு விருந்தினர்களுக்கு விஞ்ஞான துளிர் மற்றும் புத்தகம் நினைவு பரிசாக வழங்கி சிறப்பிக்கப்பட்டனர். தமிழ்நாடு அறிவியல் இயக்க திருப்பத்தூர் கிளையின் புதிய நிர்வாகிகளை மாவட்டச் செயலாளர் ஆரோக்கியசாமி முன்மொழிந்தார். புதிய நிர்வாகிகளின் தேர்வில் கிளைத் தலைவராக விக்டர் கிளைச் செயலாளராக மெஹர்பானு கிளைப் பொருளாளராக செந்தாமரைச் செல்வி துணைத்தலைவராக ஸ்ரீதர் ராவ் துணைச் செயலாளராக முத்துக்குமரன் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அப்சா கல்லூரியின் வேதியியல் துறை தலைவர் பாலசிவ சங்கர் முனைவர் இளையராஜா பேராசிரியர் முனைவர் கருணாகரன் காரைக்குடி கிளைச் செயலாளர் டென்சிங் அருள்ராஜ் பொதிகை கோவிந்தசாமி ஆசிரியர் செந்தமிழ் செல்வி வானவில் மன்ற கருத்தாளர்கள் தனலெட்சுமி புஷ்பவள்ளி

ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். செயற்குழு உறுப்பினர் இராஜயோகம் நன்றி கூறினார்.



மதுரை மாவட்டம் TCOA சங்கம் சார்பாக மாநில தலைமை வழிகாட்டுதலின்படி மாவட்ட நிர்வாகிகள் சார்பாக அரசு கேபிள் டிவியில் பதிவு செய்து தொழில் செய்து வரும் வேளையில் அதே பகுதியில் non operator யை LCO மற்றும் செட்டாப் பாக்ஸ் வழங்கி உள்ளதை கண்டித்து ஒருங்கிணைந்த வாடிப்பட்டி தாலுகா சார்பாக அரசு கேபிள் டிவி நிர்வாகிகள் மாவட்ட ஆட்சியர்அலுவலகத்தில் (அரசு கேபிள்) வட்டாட்சியரிடம் மனு அளித்தனர்.இந்நிகழ்வில் மாவட்ட தலைவர் குமரேசன் மாவட்ட செயலாளர் சுரேஷ் பொருளாளர் மாயழகன் மற்றும் தாலுகா பொறுப்பாளர்கள் கேபிள் டிவி ஆப்ரேட்டர்கள் 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.





## பள்ளிக்கரணை அரசு மேல்நிலைப் பள்ளியில் நலம் காக்கும் ஸ்டாலின் பல்நோக்கு சிறப்பு மருத்துவ முகாம்

சோழிங்கநல்லூர், டிச.21-

சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பள்ளிக்கரணை அரசினர் மேல்நிலைப் பள்ளியில் பல்நோக்கு சிறப்பு மருத்துவ முகாம் 20.12.25 அன்று காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்., மா. சுப்ரமணியன் முகாமில் ஆய்வை மேற்கொண்டு பொதுமக்களிடம் குறைகளை கேட்டு அறிந்து தேவையான வசதிகளும், உதவிகளையும் அரசு அலுவலரிடம் செய்து கொடுக்க உத்தரவிட்டார். தொடர்ந்து கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டி, ஊனமுற்றவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் காச நோயைப் பற்றி பொம்மலாட்டம் விழிப்புணர்வு நிகழ்ச்சி அமைச்சரின் முன்னிலையில் பொது மக்களுக்கு விழிப்புணர்ச்சி பொம்மலாட்டம் நடத்தி சிறப்பாக மருத்துவ முகாம் நடைபெற்றது. இந்நிகழ்வில்

சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர்., எஸ். அரவிந்த் ரமேஷ், 14 வது மண்டல குழு தலைவர்., எஸ் .வி .ரவிச்சந்திரன், கல்வி குழு தலைவர் 181 வது மாமன்ற உறுப்பினர்,பாலவாக்கம்., விஸ்வநாதன், ஒன்றிய கழகச் செயலாளர் .,கோவிலம்பாக்கம்., ஜி. வெங்கடேசன் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.



## மண்ணிவாக்கம் பெரி பொறியியல் கல்லூரியில் ரோபோட்டிக்ஸ் ஆய்வகத்தின் திறப்பு விழா

### ட்ரோன் ஏர் ஷோ மாணவர்களிடையே மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது

வண்டலூர், டிச.21-

செங்கல்பட்டு மாவட்டம் வண்டலூர் அடுத்த மண்ணிவாக்கத்தில் அமைந்துள்ள பெரி கல்வி நிறுவன வளாகத்தில் மாணவர்களுக்கு தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவு சார்ந்த பயிற்சிகளை வழங்கும் வகையில ரோபோட்டிக்ஸ் ஆய்வகத்தின் திறப்பு விழா சிறப்பாக நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக எம்.ஐ.டி.கல்லூரியின் விண்வெளி ஆராய்ச்சி விஞ்சானி டாக்டர் வசந்தராஜ் ராஜகோபால், வில்லேஜ் டெக்னாலஜி ஸ்கூல் நிர்வாகிகள் பாலாஜி வரதன் மற்றும் பாலாஜி திரு ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

இந்த விழாவில், மாணவர்கள் நடைமுறை சார்ந்த தொழில்நுட்ப அறிவைப் பெறும் வகையில் புதிதாக அமைக்கப்பட்ட ரோபோட்டிக்ஸ் ஆய்வகத்தை பெரி கல்வி குழும தலைவர் சரவணன் பெரியசாமி திறந்து வைத்தார். இந்த ஆய்வகம் மூலம் ரோபோட்டிக்ஸ், செயற்கை நுண்ணறிவு, தானியங்கி தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில் மாணவர்கள் பயிற்சி பெறவுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து, பெரி பள்ளி மற்றும் பெரி இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜியுடன் வில்லேஜ் டெக்னாலஜி ஸ்கூல் இணைந்து கல்வி-தொழில்துறை இணைப்பை வலுப்படுத்தும் வகையில் இரண்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (MoU) கையெழுத்திடப்பட்டன.

இந்த ஒப்பந்தங்கள் மூலம் மாணவர்களுக்கு திறன் மேம்பாடு, தொழில்நுட்ப பயிற்சி மற்றும் தொழில்முனைவு வாய்ப்புகள் உருவாகும் என தெரிவிக்கப்பட்டது.

மேலும் விழாவின் சிறப்பம்சமாக, மாணவர்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் ரோபோட்டிக்ஸ் மற்றும் ட்ரோன் அடிப்படையிலான ஏர் ஷோ நடத்தப்பட்டது. இதில் ட்ரோன் இயக்கம் மற்றும் அதன் தொழில்நுட்ப செயல்பாடுகள் நேரடியாகக் காண்பிக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சி மாணவர்களிடையே பெரும் உற்சாகத்தை ஏற்படுத்தியது. இந்நிகழ்வில் பெரி கல்வி நிறுவனங்களின் தலைமைச் செயல் அலுவலர் சசி வீரராஜன், இயக்குனர் தெய்வானை செந்தில், பொறியியல் தொழில்நுட்ப கல்லூரியின் முதல்வர் முனைவர். ஆர்.பால்சன் கென்னடி, பெரி பள்ளியின் முதல்வர் முனைவர் ஏ.தாண்டவன் மற்றும் மாணவ,மாணவியர் பெரி பள்ளியின் மாணவ மாணவியர்களும் கலந்து கொண்டு இந்நிகழ்வை கண் கண்டுகளித்தனர்





### காட்பாடி தாலுகா, பொன்னை கொல்லப்பள்ளி, மாதாண்ட குப்பம் ஆகிய ஊராட்சிகளில்

## அரசு பள்ளி மாணவர்களுக்கு இலவச மிதிவண்டி வழங்கும் விழா மற்றும் படியில் பல்வேறு இடங்களில் பேருந்து பயணியர் நிழற் கூடம், புதிய நியாய விலை கடை திறப்பு விழா

வேலூர், டிச.21-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, பொன்னை ஊராட்சி, பொ ன்னை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டி வழங்கும் விழா வேலூர் மாவட்ட வருவாய் அலுவலர் மா. சிவசுப்பிரமணியன் தலைமையில் நடை பெற்றது. சிறப்பு அழைப்பாளராக வேலூர் பாராளு மன்ற உறுப்பினர் கதிர்ஆனந்த் கலந்து கொண்டு பள்ளி மாணவியர்களுக்கு இலவச மிதி வண்டிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட கல்வி அலுவலர் ரமேஷ்பாபு, (தனியார் பள்ளிகள்), காட்பாடி ஒன்றிய குழு பெருந்தலைவர் வேல்முருகன், காட்பாடி வட்டாட்சியர் ஜெகதீஸ்வரன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நந்தகுமார், கனகராஜ், மாநகராட்சி 12வது மாமன்ற உறுப்பினர் மட்டா சரவணன், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் கலைவாணி பாபு, கேசவன், (தொடக்கக் கல்வி) ஒன்றிய குழு உறுப்பினர்கள் ரவி, நதியா பவுல், அரசு அலுவலர்கள் பள்ளி தலைமையாசிரியர் உள்ளிட்ட மாணவிகள், உரை சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இதனைத் தொடர்ந்து காட்பாடி ஊராட்சி ஒன்றியம் மாதாண்ட குப்பம் ஊராட்சியில் பகுதிநேர நியாயவிலைக கடை, கொல்லப்பள்ளி ஊராட்சியில் பகுதிநேர நியாய விலைக் கடை. மற்றும் காட்பாடி சட்ட மன்ற உறுப்பினர் மேம் பாட்டு நிதியிலிருந்து சுமார் ரூ,11, லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய பயணியர் பேருந்து நிழற் கூடத்தை வேலூர் பாராளுமன்ற உறுப்பினர் கதிர்ஆனந்த் திறந்து பொதுமக்களின் பயன்பாட்டிற்காக அர்ப்பணித்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் சிவசுப்பிரமணியன், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் குண ஐயப்பதுரை, அரசு அதிகாரிகள், ஊராட்சி மன்ற தலைவர் உள்ளாட்சி பிரதிநிதிகள் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



## கடும் பனி: பிரதமர் மோடியின் ஹெலிகாப்டர் தரையிறங்க முடியாமல் கொல்கத்தா திரும்பியது

கொல்கத்தா, டிச.21-

மேற்கு வங்கத்தில் உள்ள தாஹேர்பூர் ஹெலிபேடில் பிரதமர் நரேந்திர மோடியின் ஹெலிகாப்டர் இன்று (டிச.20) அப்பகுதியில் நிலவிய அடர்ந்த மூடுபனியால் ஏற்பட்ட காட்சித் தெளிவின்மை காரணமாக தரையிறங்க முடியாமல் கொல்கத்தாவுக்கு திரும்பியது.

இன்று காலையில் பிரதமர் மோடியின் ஹெலிகாப்டர் தாஹேர்பூர் ஹெலிபேட் தளத்தின் மீது சிறிது நேரம் வட்டமிட்ட பிறகு, யூடர்ன் அடித்து கொல்கத்தா விமான நிலையத்துக்கே திரும்பியது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து, பிரதமர் மோடி பேரணி நடைபெறும் தாஹேர்பூருக்கு சாலை மார்க்கமாகச் செல்வாரா அல்லது வானிலை சீரடையும் வரை காத்திருந்து, வான்வழி மார்க்கமாகவே செல்வாரா என்பது உடனடியாகத் தெரியவில்லை என்று அந்த அதிகாரிகள் கூறினர்.

முன்னதாக, இன்று காலை 10.40 மணியளவில் பிரதமர் மோடி கொல்கத்தா வந்தடைந்தார். அங்கிருந்து நதியா மாவட்டத்தில் உள்ள தாஹேர்பூருக்கு ஹெலிகாப்டரில் புறப்பட்டார். தாஹேர்பூரில் அவர் மேற்கு வங்கத்தில் நெடுஞ்சாலைத் திட்டங்களைத் தொடங்கி வைக்கும் ஒரு நிகழ்ச்சியிலும், அதைத் தொடர்ந்து 'பரிவர்த்தன் சங்கல்ப் சபா' என்ற பெயரில் நடைபெறும் பாஜகவின் அரசியல் பேரணியிலும் உரையாற்ற உள்ளார்.



■ தமிழக வெற்றிக் கழகம் தாராபுரம் தெற்கு நகர கழக நிர்வாகிகள் மற்றும் வார்டு செயலாளர்கள் ஆலோசனை கூட்டம் நேற்று மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்றது இதில் நாம் நமது தெற்கு நகரத்தில் தெருமுனை பிரச்சாரம் செய்வது குறித்தும் உறுப்பினர் சேர்க்கையை அதிக்கப்படுத்திடவும் அடுத்த கட்ட நகர்வை எவ்வாறு எடுத்து செல்வது குறித்தும் விரிவாக விவாதிக்கபட்டது. இந்நிகழ்வில் தாராபுரம் தெற்கு நகர செயலாளர் அபுத்தாஹீர் தலைமை தாங்கினார், ஜவகர் அண்ணா, அம்மன் பாலு அண்ணா மற்றும் மாவட்ட வாக்குசாவடி அணி அமைப்பாளர் சுஜித், ஆகியோர் முன்னிலை வகித்தனர், நகர து. செயலாளர் ரமேஷ், பொருளாளர் குணசேகரன், சண்முகபிரியன், கோகுல், தில்லை வார்டு செயலாளர்கள் ரங்கராஜ், நவீத், துறைசாமி, ரஞ்சித், காளிரத்தினம், மணிகண்டன், சந்தோஷ், ஜாகிர், ராஜேஷ் குமார் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்துகொண்டனர்




■ சிவகங்கை மாவட்டம் காரைக்குடி புகைப்பட கலைஞர்கள் நல சங்கத்தின் சார்பாக ஹெல்மெட் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.பேரணியில் காரைக்குடி சுற்று வட்டார புகைப்பட கலைஞர்கள் சுமார் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.காரைக்குடி தேவர் சிலையிலிருந்து தொடங்கிய பேரணி நகரின் முக்கிய வழியாக சென்று காரைக்குடி பழைய பேருந்து வரை நடைபெற்றது. இப்பேரணியின் போது அனைத்து புகைப்படக் கலைஞர்களும் ஹெல்மெட் அணிந்து பொதுமக்கள் இருசக்கர வாகனம் ஓட்டும்பொழுது ஹெல்மெட் அணிந்து ஓட்ட வேண்டும், விபத்தை தவிர்க்க வேண்டும், சாலை விதிகளை மதிக்க வேண்டும் என்பதை அறிவுறுத்தி பேரணி நடைபெற்றது.

## கோவையில் பாரதிய ஜனதா கட்சி மகளிர் அணியின் இரண்டு நாள் பயிற்சி முகாம் கோவை எட்டிமடை பகுதியில் உள்ள தனியார் மண்டபத்தில் நடைபெற்றது

கோவை, டிச.21-

கோவையில் பாரதிய ஜனதா கட்சி மகளிர் அணியின் பயிற்சி முகாம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பா.ஜ.க தேசிய மகளிர் அணி தலைவி வானதி சீனிவாசன் எம்.எல்.ஏ பயிற்சி முகாமை துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றினார். இதில் மாநில மகளிர் அணி தலைவர் கவிதா ஸ்ரீகாந்த், மாநில மகளிர் அணி பொதுச் செயலாளர் வித்தியாலமேஷ், மாநில மகளிர் அணி செயலாளர் அருணாதேவி மோகன்ராஜா ஆகியோர் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.



அதனைத்தொடர்ந்து செய்தியாளர் சந்திப்பில் பா.ஜ.க தேசிய மகளிர் அணி தலைவி வானதி சீனிவாசன் தெரிவித்தாவது

பாரதிய ஜனதா கட்சி தமிழக மகளிர் அணி சார்பாக இந்த பருவத்தில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில, மாவட்ட நிர்வாகிகளுக்கான 24 மணி நேரம் பயிற்சி முகாம் துவங்கி உள்ளது, பாரதிய ஜனதா கட்சி கட்சியினுடைய ஒவ்வொரு தொண்டர்களுக்கும், நிர்வாகிகளுக்கும் பயிற்சி கொடுப்பது, என்பதை மிக நீண்ட காலம் செயல்படுத்தி வரக்கூடிய ஒரு கட்சி. தேசிய மகளிர் அணி தலைவியாக, மகளிர் அணிக்கு தேசிய அளவிலே பயிற்சி முகாம் ஒவ்வொரு மாநிலத்திலும், மாவட்டத்திலும் இதற்கு முன்பாக நூற்றுக் கணக்கான பயிற்சி முகாம்களை நடத்தி உள்ளதாகவும், இந்த பருவத்தினுடைய முதல் பயிற்சி முகாமாக கோவை தெற்கு மாவட்டத்தில் நடைபெறுவதாகவும், பயிற்சி முகாமில் நூற்றுக் கணக்கான பெண்கள் பங்கேற்று உள்ளதாக கூறினார். இதில் பல்வேறு அமர்வுகள் ஏற்படுத்தப்பட்டு உள்ளதாகவும், மத்திய அரசின் மகளிர் நலத் திட்டங்கள், அவற்றை அமல்படுத்தக் கூடிய வாய்ப்புகள், அந்த திட்டங்களினால் கோடிக் கணக்கான பெண்களின் வாழ்க்கையில் ஏற்படுத்தி இருக்கக் கூடிய மாற்றங்கள் இதைப் பற்றி எல்லாம் அமர்வுகள் உள்ளதாகவும், அதே போன்று பெண்கள் எப்படி ? தனித்திறமைகளை வளர்த்துக் கொள்வது என்றும், ஒரு தலைமை த்துவ பண்பை எப்படி ? வளர்ப்பது என்பதற்கான அமர்வுகளும் உள்ள தாகவும், அதேபோன்று கட்சி மட்டுமல்லாமல், ஆர்.எஸ்.எஸ் இயக்கங்களின் பெண்ணியம் சார்ந்த சிந்தனைகள் எப்படி ? அவர்களுடைய செயல்பாடுகள், பங்களிப்பு பொது வாழ்க்கையில் எப்படி ? அதிகரிப்பது பெண்கள் எப்படி ? அரசியலில் குடும்ப வாழ்க்கையில் இருந்து சமம் செய்து கொள்வது என்பதை தெரிந்து கொள்வதற்காக அமர்வுகள் உள்ளதாகவும், தெரிவித்தார்.

இன்றைய அரசியல் சூழலில் சமூக ஊடகங்களை எப்படி ? பயன்படுத்துவது அல்லது எப்படி ? எதிர்கொள்வது இரண்டிலுமே பயிற்சி தேவைப்படுவதாகவும், அதற்கான பயிற்சிகளும் இந்த பயிற்சி முகாமில் வகுப்புகள் உள்ளதாக தெரிவித்தவர்,

மகளிர் அணியை தேர்தலுக்காக தயார்படுத்துவது, மட்டுமல்லாமல் அரசியல் ரீதியாக அவர்களின் பங்களிப்பை அதிகப்படுத்துவது, மேம்படுத்துவது என்ற நோக்கத்தில் இந்த பயிற்சி முகாம்கள் உள்ளதாக தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாநில செயற்குழு உறுப்பினர் சட்டமன்ற அமைப்பாளர் கே. வசந்தராஜன், தெற்கு மாவட்ட தலைவர் ஆர் சந்திரசேகர், தெற்கு மாவட்ட மகளிர் அணி தலைவர் மஞ்சு குமரன், மேலும் 67 மாவட்ட மகளிர் நிர்வாகிகள், உறுப்பினர்கள் உட்பட பலர் பயிற்சி முகாமில் கலந்து கொண்டனர்.

